பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

மலர் 22 ஆடி 21 றமழான் 23 இதழ் 173
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 5-8-80

UNIVERSITY OF SRI LANKA RECEIVED PERIODICALS DIVISION LIBRARY CAMPUS

நேற்றும் நிகழ்ந்தது!

## பஸ் - சைக்கிள் மோதல்: ஆசிரியர் பலியானார்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றுக்காலை நிகழ்ந்த பஸ் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியானார்.

இக்கோர விபத்து நேற்று காலை 7 மணியளவில் யாழ். பொம்மைவெளியில் நடைபெற்றது.

விபத்தில் பலியான 4 பிள்ளைகளின் தந்தையான முருகேசபதிப்பிள்ளை (வயது 59) யின் மரணவிசாரணை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றபோது திரு. கே. சாந்தநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

விபத்தில் மரணமான கனை

[8-ம் பக்கம் பார்க்க]

### "மான்யக்குழுவின் தெரிவுமுறை அரசியல் சாசனத்துக்கு முரணானது

# திறமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி"

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

**1980வது வருடத்தின் பல்கலைக்கழக அனுமதி, அரசியல் சாசனத்துக்கு முரணானவகையில் வழங்கப்பட்டுள்ளதென்றும், விகிதாசார அடிப்படையில், பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதி; அரசியல் சாசனத்தின் பன்னிரண்டாவது ஷரத்துக்கு முரண்பட்டதாக அமைந்துள்ளதென்றும் உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு அளித்துள்ளது.**

இவ்வருடத்தின் பல்கலைக்கழக அனுமதி விஷயத்தில் மான்ய ஆணைக்குழு செயற்பட்டமுறை, புதிய அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள "சமஉரிமை சகலருக்கும் பாதுகாப்பு" என்ற ஷரத்துக்கு முரணாக உள்ளது என்றும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

விகிதாசார அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படாமல், திறமை அடிப்படையில் மட்டுமே பல்கலைக்கழக அனுமதி அளிக்கப்படவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த செல்வி திரந்தி பேரேரா எனும் மாணவி பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் தமக்கு அனுமதிமறுக்கப்பட்டதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இம் மனுமீது உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

### மாணவி மனு

செல்வி பேரேரா தாக்கல் செய்த ஆட்சேப மனுவில்; பழைய புதிய பாடத்திட்டங்களுக்கமைய உயர்தரப் பரீட்சையில் தாம் போதுமான மதிப்பெண்களைப் பெற்றிருந்தும் தமது திறமை புறக்கணிக்கப்பட்டு விகிதாசார அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதன் மூலம் தமக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்றும்; தமக்குக் கிடைத்த ஆகக் கூடிய மதிப்பெண்களைக் கவனத்திற் கொண்டு தமக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் விகிதாசார அடிப்படைத் தெரிவுமுறை அரசியல் சாசனத்துக்கு முரணாக அமைந்துள்ளதென்றும், திறமை அடிப்படையில் மட்டுமே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கவேண்டும் என்றும் செல்வி பேரேரா தமது மனுவில் கேட்டிருந்தார்.

### விகிதாசாரம்

பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு; (திறமை-முப்பது வீதம்; மாவட்ட அடிப்படை

(8-ம் பக்கம் பார்க்க)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதி திடீரென நிறுத்தம்!

### வட்டு. எம். பி. தகவல்

(மானிப்பாய்)

"1980-ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியுதவியில் எந்தெந்த வேலைகளைச் செய்வதெனநாம் தீர்மானித்து நிதியும் ஒதுக்கியபின் இவ்வேலைகளை உடன் நிறுத்தி வைக்குமாறு அரசாங்கம் கேட்டுள்ளது. வடபகுதியில் மட்டும்தானா இவ்வாறு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. இதுபற்றிபாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பி இவ்வேலைகள் நிறுத்தப்பட்டதற்கான காரணத்தை அறிய முயல்வேன்"

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு சுழிபுரம் சின்னத்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

தலைமையாசிரியர் திரு. க. வடிவேலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

"பன்முகப்படுத்தப்பட்ட நிதியுதவியில் நாம் கல்வி அபிவிருத்திக்காக அதிக நிதியை ஒதுக்கி வருகின்றோம். நானே சன்றுறைப் பிரதிநிதி இவ்வித்தியாலயத்திற்கு ஒருலட்ச ரூபாவை இவ்வாண்டு ஒதுக்கியிருந்தேன். ஆனால் இவ்வாண்டு வேலைகளை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதால் இந்த ஒருலட்ச ரூபா எப்போது இவ்வித்தியாலயத்திற்கு பயன்படும் என்பது தெரியவில்லை.

[8-ம் பக்கம் பார்க்க]

## புகையிரத மேடை

[அரியாலை]

யாழ். கச்சேரி செயலகத் தரிப்பிடத்தில் புதிய புகையிரதமேடை அமைக்கும் வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்க செயலக ஊழியர்களுக்கு வசதியாக புகையிரத மேடையொன்றை அமைக்கும்படி யாழ். அரசாங்க அதிபரும் 'யாழ்' மாவட்ட அமைச்சருமான திரு. யோகேந்திரா துரைசாமி போக்குவரத்து அமைச்சரிடம் நேரில் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. [ச]

## சார்ஜன்ட் அன்ரனுக்கு பொலிஸார் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை இரவு யாழ். நகரில் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமான யாழ். பொலிஸ் சார்ஜன்ட் ஜே. அன்ரனின் (வயது 41) மரணச் சடங்குகள் நேற்றுமாலை மாதகலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அன்ரனின் மரணச் சடங்கின்போது பெருந்தொகையான பொலிசாரும், பொதுமக்களும் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

வடபிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரன், யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஜயசிங்ஸ்ஸ்தோத்தி உதவிப் பொலிஸ் அதிபர்களான ஜஹுப் நிஸாம், ஜஹுப் பக்கீர் மற்றும் வவுனியா, மன்னார் பொலிஸ் அதிபர்கள், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் மற்றும் வடபிராந்திய பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டபிள்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். கொழும்பிலிருந்து பொலிஸ் பாண்ட்கோஷ்டியும் வரவழைக்கப்பட்டிருந்தது. (செ)

## கொக்குவிலே மறந்த "உத்தரதேவி"

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று நண்பகல் புறப்பட்ட "உத்தரதேவி" கடுகதி ரயில் கொக்குவிலில் தரிக்காமல் யாழ் நோக்கிச் சென்றபோது, கொக்குவில் ரயில் நிலையத்தில் குழுமி நின்ற ஏராளமான பிரயாணிகள் செய்வதறியாது திகைத்து நின்றனர்!

என்ன ஆச்சரியம்! இரண்டு நிமிடங்களின் பின்னர் கடுகதிரயில் பின்னோக்கி வந்து, கொக்குவில் ரயில்நிலையத்தில் தரித்து நின்று பிரயாணிகளை ஏற்றிச்சென்றது!

பொத்துவில் தொகுதி எம். பி. நியமனம்

## கூட்டணிமனுமீது செப். 11-ல் தீர்ப்பு

(கொழும்பு)

பொத்துவில் தொகுதி எம். பி. நியமனத்தை தமது கட்சிக்கே தரவேண்டும் எனக்கோரி தமிழர் விடுதலைக்கூட்டணி தாக்கல் செய்துள்ள ரிட்மனு மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் அடுத்த மாதம் பதினொராம் திகதி தீர்ப்பு வழங்கும்.

பொத்துவில் தொகுதி எம். பி நியமனம் தொடர்பாக கூட்டணி தாக்கல் செய்த மனுமீது நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான திரு. டபிள்யூ விமலரத்ன (தலைவர்) திரு. எல். டி. தம்பையா ஆகியோர் முன்னிலையில் விசாரணை ஆரம்பமானது.

தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தாக்கல் செய்துள்ள இம்மனுவின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம் ஆஜரானார். பொத்துவில் தொகுதி 2வது எம். பி. திரு. எம். கனகரத்தினத்தின் மறைவினால் காலியான இடத்தை நிரப்ப தமது கட்சிக்கே அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று மனுதார் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

மனுவை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு எழுதுவதை செப்டம்பர் மாதம் பதினொராம் திகதி வரை ஒத்திவைத்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் தமிழ்மொழி கலாசாரம் அழிந்துபோகும் அபாயம்

## பிரதி பிரதமர் ராஜரத்தினம் எச்சரிக்கை

சிங்கப்பூர், ஆக. 4
சிங்கப்பூரில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் பாதுகாக்க முன்வராவிடின் அவை தாமகவே அழிந்துபோய் விடும்;

இவ்வாறு சிங்கப்பூர் பிரதிப் பிரதமர் திரு. சின்னத்தம்பி ராஜரத்தினம் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் தமிழ்மொழி கலாச்சார சங்க விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; "சிங்கப்பூரில் 7 வீதமானோர் மட்டுமே தமிழ்ப்பேசும் மக்கள் இங்கு பொருளாதாரத் துறையிலும் சரி, நவீன விஞ்ஞானத்துறையிலும் சரி தமிழ் மொழி முன்னணியில் இல்லை. எனவே [illegible] தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் பேணிப்பாதுகாக்க இளம் தமிழ் மக்கள் முன்வர வேண்டியது மிக அவசியம்" (இ)

### யாஸிர் அரபாத் மகாநாடு கூட்டுகிறார்

பெய்ரூட், ஆக. 4
ஜெருஸலத்தை இஸ்ரேலின் தலைநகராக்கும் இஸ்ரேலியப் பாராளுமன்றத் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அரபு நாடுகளின் உச்சிமகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாஸிர் அரபாத் மேற்கொண்டுள்ளார்.

இந்த உச்சிமகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அரபு நாடுகளுக்கு யாஸிர் அரபாத் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

### அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக பாப்பரசர் குரல் கொடுக்க வேண்டும்

#### கொமெய்னி கோரிக்கை

தெஹ்ரான், ஆக. 4
புனித பாப்பரசர் தமது போக்கை மாற்றி அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காகப் பாடுபட முன்வரவேண்டும்.

இவ்வாறு ஈரானிய சமயத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி பாப்பரசரைக் கேட்டுள்ளார்.

சமீபத்தில் சந்தித்த பாப்பரசரின் பிரதிநிதி ஒருவர் மூலம் அயத்தொல்லா கொமெய்னி மேற்கண்டவாறு பாப்பரசரைக் கேட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஈரான் மக்களை சித்திரவதை செய்யப்படுவதற்கும் அமெரிக்க சிறைகளில் ஈரானிய மாணவர்கள் இம்சிக்கப்படுவதற்கும் எதிராக பாப்பரசர் குரல்கொடுக்கவேண்டும் என்றும் அயத்தொல்லா கொமெய்னி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

### வாணிஷ் சாராயத்துக்கு 18 பேர் பலி

பம்பாய், ஆக. 4
பம்பாயில் வாணிஷ் சாராயத்தினால் எண்பேர் பலியாகினர்.

சட்டவிரோதமாக ஸ்பிரிட்டுடன் வாணிஷைக் கலந்து இம்மதுபானம் தயாரிக்கப்பட்டதாம். (இ)

### இந்தியாவில் மீண்டும் வெள்ளப்பெருக்கு

புதுடில்லி, ஆக. 4
இந்திய மாநிலங்களில் மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அஸாம் மாநிலத்தில் உள்ள ஆறுகள் பெருக்கெடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள கோதாவரி ஆறு பெருக்கெடுத்துள்ளதால் பலர் வீடிழந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### ஒலிம்பிக் சைக்கிளோட்டம்

மாஸ்கோ, ஆக. 4
22-வது ஒலிம்பிக்கின் 189 கிலோமீட்டர் தூர சைக்கிளோட்டப் போட்டியில் 32 நாடுகளைச் சேர்ந்த 115 வீரர்கள் கலந்துகொண்டனர். மிக விறுவிறுப்பைத் தருவதாக இருந்த இப்போட்டியில் 23 வயதுடைய செர்ஜிக்ஹெராவு சென்கோவ் என்ற சைக்கிள் வீரர் முதலாவதாக வந்தார். இவர் இத்தூரத்தைக் கடக்க எடுத்த நேரம் 4 மணி 48 நிமிடம் 28 விநாடி.

இன்றைய சைக்கிளோட்டப் போட்டியில் போலந்தைச் சேர்ந்த செஸ்லாவ் முதலாவதாக வந்தார். (இ)

### கருவாடுபதனிடும் நிலையம்

(யாழ்ப்பாணம்)
வடமகுதியிலுள்ள பொறியியல் கம்பனியொன்றினால் அமைக்கப்பட்ட கருவாடு பதனிடும் இயந்திரமொன்றை கடந்தவாரம் கடற்றொழில் கூட்டுறவுதாபனத்தில் பிரதி கடற்றொழில் அமைச்சர் திரு சரத் அபேசுந்தரா திறந்து வைத்தார்.

நல்லூரில் அமைந்திருக்கும் இந்நிறுவனம் இவ்வாண்டுக்குள் பல காய்கறி உணவு தயாரிக்கும் இயந்திரங்களை அமைத்து நாடு பூராவும் விநியோகம் செய்யவுள்ளது. (க)

### நாட்டில் சீர்கெட்டுள்ள

# சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் நிலைநாட்டவும்

## தி. மு. க. மத்தியமாநில அரசுகளுக்கு கோரிக்கை

திருச்சி, ஆக. 4
நாடு முழுவதும் சீர்கெட்டு வரும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட மத்திய அரசும் மாநில அரசுகளும் முன்வர வேண்டும்.

இவ்வாறு திராவிட முன்னேற்றக்கழக மகாசபை மத்திய மாநில அரசுகளைக் கோரியுள்ளது.

தி. மு. க.வின் மகாசபை திருச்சியில் கூடியபோது இது தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

தமிழ்நாட்டில் அண்மையில் பதவி ஏற்ற அ. தி. மு. க. அரசு தேர்தல் வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. எனவே தனது தேர்தல் வாக்குறுதிகளை உடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாநில அரசைக்கோருவதென்றும் மகாசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

### (மாஸ்கோ ஒலிம்பிக்ஸ்)

# 36 உலக, 74 ஒலிம்பிக் சாதனைகள்

மாஸ்கோ, ஆக. 4
நடந்து முடிந்த மாஸ்கோ ஒலிம்பிக் போட்டியின்போது 36 உலக சாதனைகளும் 74 ஒலிம்பிக் சாதனைகளும் நிலைநாட்டப்பட்டன.

சோவியத் யூனியன் மட்டும் 25 ஒலிம்பிக் சாதனைகளை நிலைநாட்டியது.

ஒலிம்பிக் நிறைவு வைபவம் மாஸ்கோ லெனின் மைதானத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்கின் இறுதி நிகழ்ச்சி சுமார் 100 நிமிடங்கள் நீடித்தன. இந்த இறுதி நிகழ்ச்சியின் போது மைதானத்தில் ஏற்றப்பட்டிருந்த ஒலிம்பிக் தீபம் இறுதியாக அணைந்தது.

இந்நிகழ்ச்சியை அடுத்து வாணவேடிக்கைகளும் இடம்பெற்றன.

இந்த ஒலிம்பிக் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட சோவியத் யூனியன் 80 தங்கப்பதக்கங்களையும் 70 வெள்ளிப் பதக்கங்களையும் 47 வெண்கலப் பதக்கங்களையும் சுவீகரித்தது.

இரண்டாம் இடத்தைச் சுவீகரித்துக்கொண்ட கிழக்கு ஜெர்மனி 47 தங்கப்பதக்கங்களையும் 36 வெள்ளிப்பதக்கங்களையும் 43 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றது. (இ)

### "பாராட்டுவிழாக்களிலும் ஆக்கப்பணிகள் மேல்"

(உடுப்பிட்டி)
"குருத்துவம் மூலம் இறைவனுக்கும் கத்தோலிக்க மதத்துக்கும் பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது பெரும் பேறாகும். குருக்கள், துறவியர்களுக்கு விழாவெடுத்துப் பாராட்டுவதிலும் பார்க்க நல்ல பல செயல் திட்டங்களை மேற்கொண்டு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய வேண்டும்" என்று புதிதாகக் குருத்துவப்பட்டம்பெற்ற அருட்திரு. பி. ஏ. சின்னராசா அடிகளார் கரவைக் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தினால் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டி புனித பரலோக மாதா ஆலயத்தில் மன்றத் தலைவர் திரு. எஸ். நீக்கிலாப்பிள்ளை தலைமையில் இப் பாராட்டுவிழா நடைபெற்றது.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. வி. கோபி, கரவெட்டிப் பங்குத் தந்தை அருட்திரு. டொமினிக் அடிகளார், மன்றச்செயலாளர் செல்வன் ஆன்றன் பொன்ராஜ்குமார் உட்பட பலர் உரையாற்றினார்கள். (க)

### (மன்னார்)

இலங்கை வங்கியின் மன்னார் கிளையின் மாவட்ட முகாமையாளராக திரு. சிறீரங்கநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. சிறீரங்கநாதன் திருகோணமலையிலிருந்து மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

### தமிழக சட்டசபைத் தேர்தலில்

# தி.மு.க.வுடன் இணைந்து போட்டியிட்டதால் இந்திரா காங்கிரஸ் தோல்வியுற்றது

## கோயம்புத்தூரில் அந்துலே கூற்று

கோயம்புத்தூர் ஆக. 4
தி. மு. க. வுடன் இந்திரா காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்து தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டதே அது தோல்வியடைந்ததற்குக் காரணமாகும்

இவ்வாறு மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. ஏ. ஆர். அந்துலே கோயம்புத்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

[illegible] இந்திரா காங்கிரஸார் தமது கட்சியின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் மக்களுக்கு சரிவர எடுத்துரைத்து அவர்களின் ஆதரவைப் பெறத் தவறியதும் இந்திரா காங்கிரஸ் தோல்விக்கு காரணமாகும் என்றும் திரு. அந்துலே கூறினார்.

சட்டசபைத் தேர்தல் சமயத்தில் திரு. அந்துலே இந்திரா காங்கிரஸின் பொதுச்செயலாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

